பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 20 வியாழக்கிழமை 24.07.2022 கதிர் 273

## நீதிமன்றத்துக்குள் துப்பாக்கிச் சூடு!

### கல்கிசையில் பயங்கரம்



கல்கிசை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைகள் இடம் பெற்றுக் கொண்டிருக் கையில் ☞2

# கைது வேட்டை தொடர்ந்தால் பெரும் போராட்டம் வெடிக்கும்

### – அரசுக்குச் சுமந்திரன் எச்சரிக்கை



**மக்களின் தன்னெழுச்சிப் போராட்டங்களால் ஆட்சிப்பீடமேறிய புதிய அரசு, அந்தப் போராட் டங்களுக்குத் தலைமை தாங்கியவர்களை வேட்டையாடும் செயற்பாடுகளை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.**

**இந்த அடக்குமுறையை அரசு உடன் நிறுத்த வேண்டும். இல்லையேல் அதற்கு எதிராக மக்களுடன் இணைந்து மாபெரும் போராட் டங்களில் ஈடுபடுவோம்.** ☞2

## பதும் கேர்னருக்கு கிடைத்தது பிணை

குற்றப் புலனாய்வுப் பிரிவி னரால் கைதுசெய்யப்பட்ட சமூகச் செயற்பாட்டாளர் பதும் கேர்னர் பிணையில் விடுவிக் கப்பட்டுள்ளார்.

இன்று அவர் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அவரைப் பிணை யில் விடுவிக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.


## கைதான போராட்டக்காரர்களை உடனே விடுதலை செய்யுங்கள்

### கொழும்பில் இன்று ஆர்ப்பாட்டம்



இலங்கை ஆசிரியர் சங்கத் தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட தொழிற் சங்கத் தலைவர்கள் மற்றும் போராட்டச் செயற்பாட்டாளர்களை அரசு உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என வலியுறுத்தி கொழும்பில் ☞2

## குறைகின்றது பஸ் கட்டணம்



இன்று நள்ளிரவு முதல் சாதாரண பஸ் பயணக் கட் டணங்கள் குறைக்கப்படவுள் ளன என்று தேசிய போக்கு வரத்து ஆணைக்குழு ☞2

## யானை தாக்கி ஒருவர் மரணம்

போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட திக் கோடை தளவாய் காட்டுப்பகுதி யில் காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அருள்நேசபுரம் கடுக்காமுனை கிராமத்தில் வசிக்கும் ☞2

## ஞானசார தேரரின் அறிக்கையை குப்பைக்கூடையில் வீசி விடுங்கள்

### ஜனாதிபதியிடம் ஹக்கீம் கோரிக்கை



பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தலை மையிலான ஒரே நாடு – ஒரே சட்டம் தொடர்பான செயலணி அறிக்கையை குப்பை கூடையில் போடுவதற்கு ☞2

## ஜோசப்பின் கைதுக்கு எதிராக யாழில் ஆசிரியர்கள் போராட்டம்



(ஆர்.கலையமுதன்)

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டா லின் கைதுசெய்யப்பட்டமை யைக் கண்டித்து யாழ்ப்பாணத்தி லுள்ள பாடசாலைகளின் முன் னால் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. ☞2

## சர்வகட்சி அரசில் இணைய குமார வெல்கம தீர்மானம்



சர்வகட்சி அரசில் இணைந்து முழு ஆதரவை வழங்குவேன் – என்று ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் குமார வெல்கம ஊடங் களிடம் தெரிவித்தார். ☞2

## பிலியந்தலையில் 32 பேர் சிக்கினர்



பிலியந்தலைப் பிரதேசத்தில் இன்று 4 மணித்தியாலங்கள் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின் போது ☞2

## கைது வேட்டையை உடனே நிறுத்தவும்!

### ரணிலிடம் சஜித் வலியுறுத்து



அரசியல் உள்நோக்கத்துடன் அரங்கேற்றப் பட்டு வரும் கைது வேட் டையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உடன் நிறுத்த வேண்டும்.

– இவ்வாறு எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார். ☞2

## 6 தமிழ்க் கட்சிகளும், 3 முஸ்லிம் கட்சிகளும் சர்வகட்சி வேலைத்திட்டத்துக்குப் பேராதரவு

### கஜேந்திரகுமார் அணி மாத்திரம் மௌனம்

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் 6 தமிழ்க் கட்சிகளும், 3 முஸ்லிம் கட்சிகளும் சர்வகட்சி வேலைத்திட்டத்துக்கு முழுமை யான ஆதரவை வெளியிட்டுள் ளன. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமை யிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுதியான நிலைப்பாடு மட்டுமே இன்னும் வெளியாகவில்லை. அனைத்து அரசியல் கட்சிகளையும் ☞2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு


## கைது வேட்டை ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமானஜனாதிபதிசட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் 'சர்வகட்சி ஒன்றிணைவு' என்றதொனிப்பொருளில் எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் இணைந்து இன்று நடத்திய கூட்டு ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய அரசு மக்கள் மீது தொடர்ச்சியாக அடக்குமுறையைப் பிரயோகித்துக் கொண்டிருக்கின்றது. மக்கள் எழுச்சிப் போராட்டங்களால் நாட்டில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அந்த மாற்றங்களினாலேயே இந்த அரசு ஆட்சியைக் கைப்பற்றியது. போராட்டக்காரர்களின் முதுகில் ஏறி ஆட்சியைக் கைப்பற்றியவர்கள்,தற்போது அந்தப் போராட்டக்காரர்களையே வேட்டையாடத் தொடங்கியுள்ளமையை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் ஆற்றிய கொள்கை விளக்க உரையில், ஆரம்பத்தில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டங்கள் வன்முறையற்றவையாகவும், அமைதியானவையாகவும் காணப்பட்டன என்று சான்றிதழ் வழங்கியிருந்தார். ஆனால், இந்த ஆர்ப்பாட்டங்களுக்கு ஆரம்பத்திலிருந்தே தலைமை தாங்கியவர்களைத் தற்போது அரசு கைதுசெய்து வருகின்றது.

நேற்றுக் கைதுசெய்யப்பட்ட இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் பிரபல தொழிற்சங்கவாதியாவார். அவரைக்கைதுசெய்ததை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இவ்வாறான கைதுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். ஏற்கனவே கைதுசெய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும். போராடும் உரிமையை எவரும் தடுக்க முடியாது – என்றார்.

## குறைகின்றது.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அறிவித்துள்ளது. தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் நிலான் மிரிண்டா இதனை ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

பஸ் பயணக் கட்டணங்கள் எத்தனை சதவீதம் குறைக்கப்படும் என்பது தொடர்பில் இன்று மாலை அறிவிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதிவேக வீதியின் பஸ் போக்குவரத்துக்கான கட்டணங்களில் மாற்றம் ஏற்படுத்தப்படமாட்டாது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## பிலியந்தலையில்........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
12 சந்தேக நபர்கள் உட்பட 32 பேர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் குழுவில் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட ஒரு பெண் உட்பட 3 பேர் அடங்குகின்றனர் என்று பொலிஸார் கூறினர்.

ஏனைய சந்தேகநபர்களில் ஹெரோயின், ஐஸ் போதைப்பொருள் மற்றும் கஞ்சாவுடன் 17 பேர் உள்ளனர் என்றும், சந்தேகத்தின் பேரில் 12 பேர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இன்று அதிகாலை 1 மணி முதல் அதிகாலை 5 மணி வரையான நான்கு மணித்தியாலங்கள் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

## 6 தமிழ்க் கட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உள்ளடக்கிய தேசிய சபை, நாடாளுமன்ற குழுக்களின் தலைமைப்பதவி உள்ளிட்ட சர்வகட்சி வேலைத்திட்டத்துக்கு இரா. சம்பந்தன் தலைமையிலான இலங்கைத் தமிழரசுக் கட்சி (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு), மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணி, சி.வி. விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ரிஷாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்பன இணக்கம் தெரிவித்துள்ளன. எனினும், சர்வகட்சி அரசில் பங்காளிகளாகுவது குறித்து மேற்படி கட்சிகள் இறுதி முடிவு எட்டப்படவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள கலந்துரையாடலின் பின்னர் இறுதி முடிவு எட்டப்படவுள்ளது என அறியமுடிகின்றது.

அதேவேளை, டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.), செந்தில் தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், பிள்ளையான் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி, அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸ் என்பன சர்வகட்சி அரசில் பங்காளியாகுவதற்கும் பச்சைக்கொடி காட்டியுள்ளன.

## சர்வகட்சி ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இது சம்பந்தமாக ஜனாதிபதியை நேற்று அவர் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

நான் அமைச்சுப் பதவிகளுக்காக ஆசைப்படுபவன் அல்லன். 8 ஆண்டுகள் பதவிகள் இன்றி இருந்தவன். ரணிலை ஆதரிக்கவில்லை. ஆனால், சர்வகட்சி அரசில் இணைவேன், ஆதரிப்பேன் என்று குமார வெல்கம எம்.பி. மேலும் கூறினார்.

## கைதான........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இன்று கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புக்கள் ஒன்றிணைந்து கொழும்பு, கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக இந்தப் போராட்டத்தை நடத்தின.

இதில் பங்கேற்றவர்கள் கைது நடவடிக்கைக்கு எதிராகப் பல்வேறு பதாகைகளைத் தாங்கியிருந்தனர்.

## ஜோசப்பின் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இன்று காலை 10:30 மணியளவில் ஒன்றுகூடிய அதிபர் மற்றும் ஆசிரியர்களே கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது ஜோசப் ஸ்டாலினின் கைதைக் கண்டிக்கும் வாசகங்களைக் கொண்ட பதாகைகளையும் போராட்டத்தில் ஈடுபட்ட அதிபர் மற்றும் ஆசிரியர்கள் தாங்கியிருந்தனர்.

## கைது வேட்டை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப்ஸ்டாலினைச் சந்திப்பதற்கு கொழும்பு, கோட்டை பொலிஸ் நிலையத்துக்கு எதிர்க்கட்சித் தலைவர் இன்று சென்றிருந்தார். அவரைச் சந்தித்த பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமைதியாகவும், நாகரிகமாகவும் உழைக்கும் மக்களுக்காகவும், ஆசிரியர் சமூகத்துக்காகவும் போராடிய ஜோசப் ஸ்டாலின் கைதுசெய்யப்பட்டுள்ளபோது, அடக்குமுறையின் தந்தையான மஹிந்த ராஜபக்ச ஆரோக்கியமாகப் பொழுதைக் கடத்திக்கொண்டிருக்கின்றார். மனிதநேயத்தின் பெயரால் நாடு குறித்து சிந்தித்து ஒன்றாக இணைந்து செயற்பட வேண்டிய தருணத்தில், எதேச்சதிகாரமாக அரசியல் பழிவாங்கல்களில் ஈடுபடுவதை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

இந்த அரச பயங்கரவாதத்தை உடனடியாக நிறுத்துமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கின்றேன்.

வெடிகுண்டுகள், வாள்கள், துப்பாக்கிரவைகள் போன்ற ஆயுதங்களால் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமல், கலந்துரையாடல் மற்றும் இணக்கப்பாட்டின் மூலம் பிரச்சினைகளை தீர்க்க வேண்டும்.

தற்போது வரை தொடரும் வன்முறைச் சுழற்சியை ஆரம்பித்தது முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்சவே.

எந்தவொரு குடிமகனும் தான் கருதும் கருத்தைக் கொண்டிருப்பதற்கும், அதற்காக முன் நிற்கவும், பேசவும், ஒன்றுகூடவும், அமைதியான முறையில் போராட்டம் நடத்தவும் உரிமையுண்டு.

வன்முறையற்ற அஹிம்சைவழியில் போராடும் உரிமையை யாராலும் மீற முடியாது.

ஜோசப் ஸ்டாலின் தனக்குள்ள உரிமைகளை நாட்டுக்காக ஜனநாயக முறையில் பயன்படுத்தினார். அந்த உரிமையை எவராலும் எதிர்க்க முடியாது – என்றார்.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாவதற்கு முன்னர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது ஜோசப் ஸ்டாலின் தொடர்பில் கூறியிருந்ததை நினைவு கூர்ந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அன்று அவர் கைது செய்யப்பட்டபோது ஜீ.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை இழக்க நேரிடும் என்று கூறியிருந்தால், இன்று அது அவ்வாறு இழக்கப்படாதா எனவும் கேள்வி எழுப்பினார்.

## ஞானசார ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

–இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி. வலியுறுத்தினார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் 'சர்வகட்சி ஒன்றிணைவு' என்றதொனிப்பொருளில் எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் இணைந்து இன்று நடத்திய கூட்டு ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் முறையான விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கையை ஜனாதிபதி எடுக்க வேண்டும்.

இனங்களுக்கிடையில் மோதலை ஏற்படுத்த முற்பட்டவர்தான் ஞானசார தேரர். அவர் தலைமையில் அமைந்த குழுவின் அறிக்கையைக் குப்பைத் தொட்டியில்வீசநடவடிக்கைஎடுக்கப்படுமா என்பதை ஜனாதிபதி அறிவிக்க வேண்டும் – என்றார்.

## நீதிமன்றுக்குள் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உள்நுழைந்த மர்மநபர் துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொண்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இன்று பிற்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நீதிமன்றத்தில் குற்றவாளி கூண்டில் இருந்த பிரதிவாதியைக் குறிவைத்தே துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது. எனினும், அவர் மீது சூடு படவில்லை.

இதையடுத்து சூடு நடத்தியவர் மின்னல் வேகத்தில் தப்பிச் சென்றுள்ளார்.

சினிமாப் பாணில் அரங்கேறிய இந்தச் சம்பவத்தால் நீதிமன்ற வளாகத்தில் அச்ச நிலை உருவானது.

## யானை தாக்கி ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ராசசிங்கம் மோசிகவாகனம் (வயது 57) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கடுக்காமுனை பகுதியில் இருந்து விறகு எடுப்பதற்காக 3 பேர் திக்கோடை தளவாய்காட்டுப்பகுதிக்கு சென்றபோது மறைந்திருந்த காட்டு யானை துரத்தியுள்ளது.

இதன்போது இருவர் தப்பியோடிய நிலையில் மற்றையவர் யானையின் தாக்குதலால் உயிரிழந்துள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை வெல்லாவெளிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622




# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## வடக்குக்கு நியாயம் செய்க!

நெருக்கடியில் சிக்கி இருக்கும் நாட்டை பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீட்டெடுப்பதாயின் வீழ்ச்சிக்கு காரணமான பழமை வாத சிந்தனைப் போக்குகளில் இருந்தும், பிற்போக்குத்தனமான கொள்கைப் பிடியிலிருந்தும் அரசு தலைமை வெளியே வர வேண்டும்.

நேற்று நாடாளுமன்றத்தில் தாமாற்றிய தமது அரசின் கொள்கை விளக்க உரையில் இந்த சிந்தனை மாற்றத்திற்கு தான் தயார் என்ற நிலைப்பாட்டை புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கோடி காட்டினார். ஆனால் அது பேச்சளவில் அடங்கிவிடுமா அல்லது செயலளவில் உருப்பெறுமா என்பது தான் கேள்வி.

பொதுவாகவே இலங்கையை கடந்த 50 ஆண்டுகளாக நிர்வாகித்த அரசு தலைவர்களில் ரணில் விக்கிரமசிங்கவே லிபரல் (தாராளவாத) போக்குக் கொண்டவர் என்று பார்க்கப்படுகின்றார். அத்தகையவர்களிடமிருந்து நாட்டின் பொருளாதார சீர்கேடுகளுக்கு காரணமான பழமைவாத – பிற்போக்குத்தனமான – பேரினவாத – சிந்தனை ஒட்டங்களில் இருந்து வெளியே வந்து புத்தாக்கமான, தாராளவாத, நீதியான போக்கு வெளிப்படுமென நம்பிக்கையுடன் எதிர்பார்க்க முடியும்.

அத்தகைய விடயங்களில் ஒன்றுதான் பலாலி சர்வதேச விமான நிலையத்தைத் திறப்பதாகும். அதை ஆரம்பிப்பதற்கு நின்றவர் நல்லாட்சி அரசின் பிரதமரான ரணில் விக்கிரமசிங்கதான். ஆனால் அதன் பின்னர் அதிகாரத்துக்கு வந்த ராஜபக்ஷ ஆட்சி பலாலி விமான நிலையத்தை மூடியும், அதை மீளத் திறக்க விடாமல் தடுக்கவுமே அதீத சிரத்தை காட்டியது.

நாட்டின் அந்நிய செலவாணி வருமானத்திற்கு சுற்றுலாத்துறையை நம்பியிருக்கும் இலங்கைக்கு பலாலி விமான நிலையத் திறப்பு மிக மிக முக்கியமானது. தென்னிந்திய நகரமான சென்னை மற்றும் திருச்சிக்கும் பலாலிக்கும் இடையிலான சர்வதேச விமானப் போக்குவரத்து இலங்கையின் பொருளாதார மேம்பாட்டில் ஒரு மைல் கல்லாக மாறக்கூடியது. அந்த விமான நிலையம் திறக்கப்பட்டால் வடக்கு யாழ்ப்பாணம் கேந்திர மையமாகிவிடும் எனக் காழ்ப்புணர்ச்சி கொண்ட பௌத்த, சிங்களப் பேரினவாதம் அதற்குப் பெரும் முட்டுக்கட்டை போட்டுத் தடுத்து வருகின்றது என்பது பரகசியமான உண்மை.

இந்த சர்வதேசத் தடத்தைத் திறப்பது நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு முக்கியமானது என்பதை விட அதன் மூலம் வடக்கு யாழ்ப்பாணம் மேம்பட்டு விடும் என்ற காழ்ப்புணர்வுதான் பௌத்த, சிங்கள பேரினவாத அரசில் மேலெழுந்திருக்கின்றது.

ஒன்றுக்கும் பயனற்ற மத்தள விமான நிலையத்தை பயணிகள் பயன்படுத்துகிறார்கள் இல்லை. பல்லாயிரம் கோடி ரூபா அந்தத் திட்டத்தின் பெயரில் மாதாந்தம் பெருந்தொகை வட்டியாகவும் கடன் தவணைக் கொடுப்பனவாகவும் செலுத்த வேண்டியுள்ளது. ஆனால் அந்த விமான நிலையத்தில் இறங்கி ஏறுவதற்கு பயணிகளுக்கு விமான நிலைய வரி கட்டத் தேவையில்லை. இரண்டு வருட வரி விலக்கு அரசு அளித்துள்ளது.

ஆனால் பலாலி சர்வதேச விமான நிலைய சீரமைப்புக்கு இலங்கை அரசு நிதி செலவிடவில்லை. இந்திய உதவி திட்டத்தின் கீழ் அன்பளிப்பாக செய்யப்பட்டது அது. ஆனால் அதற்கு விமான நிலைய வரிவிலக்களிப்பு இல்லை. கட்டுநாயக்கா விமான நிலையத்தில் ஒரு பயணிக்கு அறவிடும் 60 டொலர் (சுமார் 22 ஆயிரம் ரூபா) ஒவ்வொரு பயணியும் ஒவ்வொரு இறக்கம் ஏற்றத்திற்கும் செலுத்த வேண்டும்.

தான் வட்டியும் முதலும் கட்டும் மத்தளவிற்கு அந்த வரிவிலக்கை அழிக்கும் அரசு, ஒளி உதவித் திட்டத்தில் சீரமைத்த பலாலி ஊடான பயணத்திற்கு மட்டும் கட்டுநாயக்கா மாதிரி பெருந்தொகை அறவிடுவது ஏன்?

பத்தாம் திகதி இந்த விமான சேவையை ஆரம்பிக்க முன்னர் இது தொடர்பில் வடக்குக்கு நியாயம் செய்ய வேண்டும் ரணில் அரசு. செய்யுமா? பொறுத்திருந்து பார்ப்போம்.

# யாழில் கொவிட் தொற்றாளர் அதிகம் பாதுகாப்பாக இருக்கக் கோரிக்கை!

## வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் அறிவுறுத்து



யாழ்.மாவட்டத்தில் அதிகளவான கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளார்கள் எனவே அனைவரையும் பாதுகாப்புடன் சுகாதார நடைமுறைகளை பின்பற்றுமாறு வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்காக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

கொரோனாத் தொற்று தற்போது இலங்கை முழுவதும் பரவி வருகின்றது. அந்த வகையில் யாழ். மாவட்டத்திலும் கொரோனாத் தொற்றாளர்கள் அதிகமாக இனங்காணப்பட்டுள்ளனர்.

அத்துடன் இரண்டு கொரோனா மரணங்களும் ஜூலை மாதத்தில் நிகழ்ந்துள்ளன. எனவே, இந்நிலைமை கொரோனா பெருந் தொற்றாக மாறுவதற்குரிய ஆபத்து நிலைமையை காட்டுகின்றது.

அவ்வாறான ஒரு நிலைமை ஏற்படின் முன்பு போன்றே கொரோனா இறப்புக்கள் பெருமளவு ஏற்படும். இந்நிலையில் எம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு எமக்கு முன்னால் உள்ள தெரிவுகள் மிகச்சிலவே.

மக்கள் அதிகளவு கூடும் இடங்களில் பொதுச் சுகாதார நடைமுறைகளான முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளி பேணல், சரியான முறையில் கைகளைக் கழுவுதல் என்பவற்றைக் கடைப்பிடித்தல்.

தடுப்பூசியை 20 வயதுக்கு மேற்பட்ட அனைவரிற்கும் பெற்றுக் கொடுத்தல். தடுப்பூசியை இதுவரை பெற்றுக் கொள்ளாத வர்களும் மற்றும் மூன்றாவது அல்லது நான்காவது தடவை பெற்றுக்கொள்ளாதவர்களும் உடனடியாக அதனைப் பெற்றுக் கொள்ள வேண்டும். முக்கியமாக 60 வயதுக்கு மேற்பட்டவர்களும் வேறு நீண்டகால நோய் நிலைமைகளால் பாதிக்கப்பட்டவர்களும் தமது நான்கு தடுப்பூசிகளையும் பெற்றிருப்பதை உறுதி செய்தல் வேண்டும்.

இந்தத் தடுப்பூசிகள் வழங்கப்படும் நிலையங்கள் மற்றும் திகதிகள் தொடர்பாக சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளுக்கு அழைப்பதன் மூலம் மக்கள் தெரிந்து கொள்ளலாம்.

மேலும், வடமாகாணத்தில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் திங்கள், புதனும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் செவ்வாய், வெள்ளியும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் செவ்வாய், வியாழனும் ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையில் செவ்வாயும் முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் செவ்வாய், புதனும் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் செவ்வாய், வியாழனும் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் புதன், சனியும் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் திங்கள், செவ்வாய், புதனும் கொரோனாத் தடுப்பூசி வழங்கப்படும். பொதுமக்கள் மூன்றாவது மற்றும் நான்காவது தடவை தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதற்கு செல்லும்போது முதலில் தடுப்பூசி பெற்றுக் கொண்டமையை உறுதிப்படுத்துவதற்காக சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் வழங்கப்பட்ட அட்டையை எடுத்துச் செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். எனவே, மக்கள் அனைவரையும் அச்சமின்றி தமக்கென அறிவிக்கப்பட்ட நாள்களில் உரிய இடத்திற்கு சென்று தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

கொரோனா தொற்றுநோய்க்கெதிரான தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வது உங்களையும் உங்களுக்குப் பிரியமானவர்களையும் இந்தக் கொரோனா தொற்றுநோயிலிருந்து பாதுகாப்பதுடன் எமது சமூகத்தையும் பாதுகாப்பதாக அமையும் என்றுள்ளது.

# பஸ் கட்டணங்கள் இன்று குறைக்கப்படும்

பஸ் கட்டணங்கள் இன்று நள்ளிரவு முதல் குறைக்கப்படும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அண்மையில் ஒரு லீற்றர் டீசலின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டதன் பயனை பயணிகளான மக்களுக்கு வழங்குதற்காக பஸ் கட்டணங்கள் குறைக்கப்படுகின்றன என ஆணைக்குழுவின் பணிப்பாளர் கலாநிதி நிலான் மிரேண்டா தெரிவித்துள்ளார்.

குறைக்கப்படும் பஸ் கட்டணங்களின் விதம் தொடர்பில் இன்று அறிவிக்கப்படும் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# கல்முனை மாநகர சபையில் முறையிட விசேட கருமபீடம்

(பாறுக் ஷிஹான்)




கல்முனை மாநகர சபையின் சேவைகள் தொடர்பான முறைப்பாடுகளை பொது மக்களிடமிருந்து உடனுக்குடன் பெற்றுக் கொள்வதற்காக Call Centre (அழைப்பு நிலையம்) எனும் விசேட கருமபீடம் ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீபின் ஆலோசனை, வழிகாட்டலில் கல்முனை மாநகர சபையின் பழைய கட்டடத் தொகுதியில் நிறுவப்பட்டுள்ள இந்நிலையத்தில் பொது மக்கள் தமது முறைப்பாடுகளை அலுவலக நேரத்தில் 0672030000 எனும் Hotline இலக்கத்திற்கோ அல்லது நேரடியாக வருகைதந்து வாய்மூலமாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ தெரிவிக்க முடியும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

திண்மக்கழிவகற்றல் சேவை, தெரு விளக்கு பராமரிப்பு, வடிகான் பராமரிப்பு உட்பட மாநகர சபையினால் முன்னெடுக்கப்படுகின்ற எந்தவொரு சேவை தொடர்பிலும் இவ்வாறு முறைப்பாடளிக்க முடியும்.

கொரோனாப் பெருந்தொற்று, எரிபொருள் தட்டுப்பாடு உட்பட நாட்டின் அசாதாரண சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, பொது மக்கள் சிரமமின்றி இலகுவாகவும் விரைவாகவும் தமது முறைப்பாடுகளை முன்வைத்து, உரிய தீர்வுகளை பெற்றுக்கொள்ளும் பொருட்டு அமைக்கப்பட்டுள்ள இந்தக் கரும பீடத்தை கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட பொது மக்கள் முறையாக பயன்படுத்தி, ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# நான்சி பெலோசியின் தாய்வான் பயணத்தால் அமெரிக்கா- சீனா இடையே போர்ப் பதற்றம்



அமெரிக்க சபாநாயகர் நான்சி பெலோசியின் தாய்வான் பயணத்தால், அமெரிக்கா- சீனா இடையே போர் பதற்றம் ஏற்பட்டுள்ளது. தாய்வானுக்கு உரிமை கோரி வரும் சீனா, அந்த நாட்டுக்கு அமெரிக்கா உட்பட தனது எதிரி நாடுகளின் தலைவர்கள் செல்வதற்கு தடை விதித்துள்ளது. அதன் கடும் எதிர்ப்பையும், மிரட்டலையும் மீறி, அமெரிக்க நாடாளுமன்ற சபாநாயகர் நான்சி நேற்று முன்தினம் தாய்வானுக்கு சென்றார். அவருடைய பயணத்தை தடுக்கும் வகையில், தாய்வான் எல்லைக்குள் 21 போர் விமானங்களை அனுப்பி அச்சுறுத்தியது. கடலில் போர் கப்பல்களையும் நிறுத்தி பயமுறுத்தியது. ஆனால், அமெரிக்க போர் விமானங்கள் புடைசூழ தாய்வானுக்கு பெலோசி சென்றார். இது, சீனாவுக்கு கடும் ஆத்திரத்தை அளித்துள்ளது.

இது பற்றி சீன வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'பெலோசி பயணம், 'ஒரே சீனா கொள்கை'யையும், சீனா-அமெரிக்கா கூட்டு ஒப்பந்தங்களையும் மீறிய செயல். இதற்கான விலையை அமெரிக்கா கொடுக்கும்' என்று தெரிவித்தது. போர் விமானங்களின் அணிவகுப்புடன் நேற்று முன்தினம் தாய்வான் சென்ற பெலோசி, தனது பயணத்தை நேற்று முடித்துக் கொண்டு ஒற்றை விமானத்தில் அமெரிக்கா புறப்பட்டு சென்றார். அவருக்கு அமெரிக்க போர் விமானங்கள் எதுவும் பாதுகாப்பு அளிக்கவில்லை.

பெலோசியின் பயணத்தை கடுமையான மானப் பிரச்சினையாக எடுத்துக்கொண்டுள்ள சீனா, தாய்வான் எல்லையை சுற்றிவளைத்து போர் விமானங்கள், போர் கப்பல்கள், ராணுவ கவச வாகனங்களை நிறுத்தி உள்ளது. அதன் ராணுவ வீரர்களும் போர் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கு பதிலடியாக அமெரிக்காவும் தனது போர் விமானங்கள், போர்க் கப்பல்களை தயார்நிலையில் நிறுத்தியுள்ளது. இதனால், இருநாடுகள் இடையே போர் பதற்றம் அதிகரித்துள்ளது. இந்நிலையில், ஒரே சீனா கொள்கைக்கு பாகிஸ்தான் ஆதரவு அளித்துள்ளது.

தாய்வான் அதிபர் சாய் இங்-வென்னை கூறுகையில், 'சீன ராணுவ அச்சுறுத்தல்களை கண்டு, தாய்வான் பின்வாங்காது. நாங்கள் எங்கள் நாட்டின் இறையாண்மையை உறுதியாக நிலை நிறுத்துவோம்,' என்றார்.

சீனாவில் உள்ள அமெரிக்க தூதர் நிக்லோஸ் பர்ன்சுக்கு சீனா வெளியுறவுத் துறை நேற்று சம்மன் அனுப்பி உள்ளது. அதில், 'அமெரிக்கா தனது தவறுகளுக்கு, ஒரு விலையை கொடுக்கும். தாய்வானின் உள்விவகாரத்தில் தலையிடுவதை அமெரிக்கா நிறுத்த வேண்டும்,' என்று கூறப்பட்டுள்ளது.

தாய்வானில் இருந்து புறப்பட்ட பெலோசி, 'உலகம் இன்று ஜனநாயகம், எதேச்சதிகாரம் ஆகிய ஒன்றில் தேர்வு செய்ய வேண்டிய நிலையை எதிர்கொள்கிறது. தாய்வான் மட்டுமன்றி, உலகளவில் ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கான அமெரிக்காவின் உறுதி நீடிக்கும். தாய்வானை அமெரிக்கா ராணுவ ரீதியாகப் பாதுகாக்கும்,' என தெரிவித்தார்.

பெலோசியை தாய்வான் வரவேற்றதால், தாய்வானின் சில உணவு பொருள்களை இறக்குமதி செய்யவும், சீனாவின் இயற்கை மணலை தாய்வானுக்கு ஏற்றுமதி செய்யவும் சீனா தடை விதித்துள்ளது.

# போரில் ரஷ்யாவுக்கு சீனா உதவக்கூடாது உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி வலியுறுத்தல்



உக்ரைன் நாட்டின் மீது ரஷ்யா 5 மாதங்களுக்கும் மேலாக படையெடுப்பை நடத்தி வருகிறது. இந்த போரில் அமெரிக்கா உள்பட உலகின் பல நாடுகள் ரஷ்யாவுக்கு எதிராக நிற்கின்றன. போரை கடுமையாக எதிர்க்கும் அந்த நாடுகள் ரஷ்யா மீது ஏராளமான பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன. அதே சமயம் சீனா, போர் தொடங்கிய நாள் முதல் ரஷ்யாவுக்கு எதிராக எந்த கருத்தும் தெரிவிக்காமல் இருந்து வருகிறது. மாறாக ரஷ்யா மீதான பொருளாதாரத் தடைகளை கடுமையாக எதிர்த்து வருகிறது.

இந்த நிலையில் உக்ரைன் மீதான போரில் ரஷ்யாவுக்கு சீனா, உதவக்கூடாது என உக்ரைன் நாட்டின் அதிபர் ஜெலன்ஸ்கி வலியுறுத்தி உள்ளார்.

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த 21 பல்கலைக்கழகங்களின் மாணவர்கள் மத்தியில் காணொலி காட்சி வாயிலாக உரையாற்றியபோது ஜெலன்ஸ்கி இதனைத் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் கூறுகையில், இப்போதைக்கு, சீனா உண்மையில் நடுநிலையாக உள்ளது, நான் நேர்மையாகச் சொல்வேன், சீனா ரஷ்யாவுடன் இணைவதை விட இந்த நடுநிலை சிறந்தது, ரஷ்யாவுக்கு சீனா உதவாது என்பது எங்களுக்கு மிகவும் முக்கியம் என கூறினார்.

# நேட்டோவில் சுவீடன், பின்லாந்து நாடுகள் இணைய அமெரிக்க செனட் சபை ஒப்புதல்

நேட்டோவில் இணைவதற்கு உக்ரைன் விருப்பம் தெரிவித்ததை தொடர்ந்து, அந்நாட்டின் மீது ரஷ்யா படையெடுத்து 150 நாள்களாக போர் செய்து வருகிறது. இதற்கிடையே, சுவீடன் மற்றும் பின்லாந்து ஆகிய நாடுகள் நேட்டோ ராணுவக் கூட்டணியில் இணையும் நடவடிக்கையில் இறங்கியுள்ளன. இந்த நடவடிக்கைக்கு ரஷ்யா எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

இந்நிலையில், சுவீடன், பின்லாந்து ஆகிய நாடுகள் நேட்டோவில் இணைவதற்கு அமெரிக்க செனட் சபை இன்று ஒப்புதல் அளித்துள்ளது. இதுதொடர்பாக, அமெரிக்க செய்தி தொடர்பாளர் நெட் பிரைஸ் வெளியிட்டுள்ள டுவிட்டர் செய்தியில், நேட்டோவில் இணைவதன் மூலம் பின்லாந்து மற்றும் சுவீடன் நமது பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் மற்றும் முழு அட்லாண்டிக் கூட்டணிக்கும் பயனளிக்கும் என பதிவிட்டுள்ளார். ஏற்கனவே கனடா உள்ளிட்ட நாடுகள் தங்களது ஆதரவினை தெரிவித்துள்ளனமை குறிப்பிடத்தக்கது.

## இங்கிலாந்து பிரதமருக்கான போட்டி

# சுனாக்கிற்கு திடீர் பின்னடைவு ட்ரசுக்கு ஆதரவு அதிகரிப்பு



இங்கிலாந்து பிரதமருக்கான போட்டியில் ட்ரசுக்கு ஆதரவு பெருகி வருவதால், அடுத்த பிரதமராகும் வாய்ப்பு பிரகாசமாகி உள்ளது. இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜான்சன் கடந்த 7ம் திகதி பதவி விலகினார். இதைத் தொடர்ந்து, கன்சர்வேடிவ் கட்சியின் தலைவர், புதிய பிரதமரை தேர்வு செய்வதற்கான வாக்குப்பதிவு நடந்து வருகிறது. இதற்கான களத்தில் 11 பேர் இறங்கினர். தற்போது, முன்னாள் நிதிய மைச்சரும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவருமான ரிஷி சுனாக், வெளியுறவு அமைச்சர் லிஸ் ட்ரஸ் மட்டுமே போட்டியில் உள்ளனர். இந்நிலையில், 'உங்களுடைய அரசு' என்ற தலைப்பில் 'தி டைம்ஸ்' பத்திரிகை கடந்த 5 நாள்களாக நடத்திய கருத்துக்கணிப்பில், சுனாக்கை விட லிஸ் ட்ரஸ் 38 புள்ளிகள் அதிகம் பெற்று முன்னிலை வகிக்கிறார்.

அவருக்கு 69 சதவீத ஆதரவும், சுனாக்கிற்கு 31 சதவீத ஆதரவும் இருப்பதாக கூறப்பட்டுள்ளது. கடந்த மாதம் 20ம் திகதி வெளியிடப்பட்ட கருத்துக் கணிப்பில் முறையே இது 62 சதவீதம், 38 சதவீதமாக இருந்தது. டோரி உறுப்பினர்களின் 80 சதவீதத்துக்கு மேற்பட்ட ஆதரவு டிரசுக்கு கிடைத்துள்ளது. 60 சதவீத கட்சி உறுப்பினர்கள் ட்ரஸுக்கு வாக்களிப்போம் என கூறியுள்ளனர், 26 சதவீதம் பேர் சுனாக்கை ஆதரித்துள்ளனர். மற்றவர்கள் வாக்களிக்கவில்லை அல்லது வாக்களிக்க விரும்பவில்லை என்று கூறியுள்ளனர். இதன் மூலம், இங்கிலாந்தின் புதிய பிரதமராக பதவியேற்கும் வாய்ப்பு ட்ரசுக்கு அதிகரித்துள்ளது.

# ஆபத்தான ஊசிகளை போட்டு போஸ் கொடுத்த ஆணழகன் மாரடைப்பால் திடீர் மரணம்





ஆபத்தான ஊசிகளை போட்டு மாஸ் போஸ் கொடுத்த பிரபல ஆணழகன் மாரடைப்பால் மரணமடைந்தார். ரசிகர்களை மகிழ்விப்பதற்காக அவர் செய்த காரியம் விபரீதத்தில் முடிந்தது. பிரேஸில் நாட்டின் பிரபல ஆணழகன் மற்றும் டிக்டாக் நட்சத்திரமான வால்டிர் செகாடோ (55) என்பவர், தனது உடலின் பாகங்களை புஷ்டியாக காட்டிட உயிருக்கு ஆபத்தான எண்ணெய் ஊசிகளை (எண்ணெய், அற்கஹோல், வலி நிவாரணிகளின் கலவை) போட்டு 'மாஸ் போஸ்' கொடுத்து வந்தார். இதனால் அவருக்கு கடுமையான நரம்பு பாதிப்பு மற்றும் உறுப்பு துண்டிப்பு ஏற்படும் என்று மருத்துவர்கள் எச்சரித்து இருந்தனர். ஆனால், தனது ரசிகர்களை திருப்திப்படுத்துவதற்காக ஆபத்தான எண்ணெய் ஊசிகளை போட்டுக் கொண்டு உடலின் பாகங்களை புஷ்டியாக காட்டி போஸ் கொடுத்து வந்தார். அதனால் அவரை சமூக வலைதளங்களில் பின் தொடர்பவர்களின் எண்ணிக்கை 16 லட்சத்திற்கும் மேல் உள்ளது. இந்நிலையில் மருத்துவர்களின் எச்சரிக்கையை மீறி 'ஹல்க்' போன்ற தசைகளை உருவாக்க பயன்படுத்தி வந்த ஆபத்தான ஊசிகளால் பாதிக்கப்பட்ட வால்டிர் செகாடோ, தனது பிறந்த நாளில் திடீரென இறந்தார். பல ஆண்டுகளாக 'சின்தோல்' ஊசிகளைப் பயன்படுத்தியதால், அவர் மரணம் அடைந்தார் என அவருக்கு நெருக்கமானவர்கள் கூறினர்.

இதுகுறித்து மேலும் அவர்கள் கூறுகையில், 'தென்கிழக்கு பிரேஸிலில் உள்ள ரிபேராவ் பிரிட்டோவில் உள்ள அவரது வீட்டில் வால்டிர் செகாடோ வசித்து வந்தார். இந்த நிலையில் அவருக்கு திடீரென மூச்சுத்திணறல் ஏற்பட்டதால் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். ஆனால், அங்கு சிகிச்சை பலனின்றி இறந்தார். பல ஆண்டுகளாக சில நண்பர்களுடன் தனிமையில் வாழ்ந்து வந்த அவர், சின்தோல் ஊசி மருந்துகளுக்கு அடிமையாகி இருந்ததமையால், பலரது எச்சரிக்கையும் புறக்கணித்ததால் இறந்தார்' என்று அவர்கள் கூறினர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஒருபோதும் பிரதமரின் மிரட்டலுக்கு காங்கிரஸ் பயப்படாது என்கிறார் ராகுல்



நஷனல் ஹெரால்டு விவகாரத்தில் பிரதமர் மோடியின் மிரட்டலுக்கு காங்கிரஸ் ஒரு போதும் பயப்படாது என காங்கிரஸ் முதன்னாள் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

டெல்லியில் உள்ள ஹெரால்டு ஹவுஸின் அலுவலகத்திற்கு அமுலாக்கத்துறை இயக்குநரகம் சீல் வைத்ததை அடுத்து, ராகுல் காந்தி கருத்து தெரிவித்துள்ளார். இதுகுறித்து நாடாளுமன்றத்தின் வெளியே செய்தியாளர்களிடம் ராகுல் காந்தி பேசியதாவது:-

நரேந்திர மோடியைக் கண்டு நாங்கள் பயப்படவில்லை. பரவாயில்லை. அவர்கள் என்ன வேண்டுமானாலும் செய்யட்டும். நாட்டையும், ஜனநாயகத்தையும் பாதுகாக்கவும், நாட்டில் நல்லிணக்கத்தைப் பேணவும் நான் தொடர்ந்து பாடுபடுவேன். அவர்கள் என்ன செய்தாலும் எனது பணியைத் தொடர்ந்து செய்வேன். எங்கள் மீது சில அழுத்தம் கொடுப்பதன் மூலம் எங்களை அமைதிப்படுத்த முடியும் என்று பா.ஜ.க. அரசு நினைக்கிறது. ஆனால் நாங்கள் அமைதியாக இருக்க மாட்டோம்.

நரேந்திர மோடியும், அமித்ஷாவும் இந்த நாட்டிற்காக என்ன செய்கிறார்கள். ஜனநாயகத்துக்கு எதிராக அவர்கள் என்ன செய்தாலும் நாங்கள் அதற்கு எதிராக நிற்போம். இவ்வாறு அவர் கூறினார்.

## டெல்லி யங் இந்தியன் அலுவலகத்துக்கு சீல்; நாடாளுமன்றில் பதிலடி கொடுக்க சோனியா முடிவு



நாட்டின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேருவால் தொடங்கப்பட்ட பத்திரிகை நஷனல் ஹெரால்டு. இந்த பத்திரிகையை வெளியிட்டு வந்த அசோசியேட்டட் ஜர்னல்ஸ் நிறுவனத்தை காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, அவரது மகன் ராகுல் காந்தி ஆகியோரை இயக்குநராக கொண்ட யங் இந்தியன் நிறுவனம் கைப்பற்றியது. இதில் சட்டவிரோத பணப்பரிமாற்றம் நடந்ததாக புகார் எழுந்தது. இது தொடர்பாக அமுலாக்க துறையினர் விசாரணை நடத்தி வருகிறார்கள். காங்கிரஸ் தலைவர் சோனியா மற்றும் ராகுல் காந்தி ஆகியோரிடம் அமுலாக்கத்துறை அதிகாரிகள் தனித்தனியாக விசாரணை நடத்தினர். இந்த விசாரணை முடிந்ததும், டெல்லியில் உள்ள நஷனல் ஹெரால்டு அலுவலகம் மற்றும் அதன் தொடர்புடைய 10க்கும் மேற்பட்ட இடங்களில் அமுலாக்க துறையினர் அதிரடி சோதனை நடத்தினர். இச்சோதனை முடிவடைந்ததை தொடர்ந்து நேற்று அமுலாக்க துறையினர் நஷனல் ஹெரால்டு அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள யங் இந்தியன் அலுவலகத்துக்கு சீல் வைத்தனர். அமுலாக்க துறையின் அனுமதியின்றி இந்த அலுவலகத்தை யாரும் திறக்கக் கூடாது என எழுதப்பட்ட வாசகங்கள் அடங்கிய நோட்டீசும், அலுவலக வாயில் முன்பு ஒட்டப்பட்டது. யங் இந்தியா அலுவலகம் சீல் வைக்கப்பட்டதற்கு காங்கிரஸ் தலைவர் சோனியா கடும் கண்டனம் தெரிவித்தார். இது தொடர்பாக நேற்று மாலை காங்கிரஸ் நிர்வாகிகளின் அவசரக் கூட்டம் டெல்லியில் நடைபெற்றது. இதில் சோனியா காந்தி பேசியதாவது:-

இந்தியாவில் சுதந்திர போராட்டம் நடந்தபோது நஷனல் ஹெரால்டு பத்திரிகையை ஜவஹர்லால் நேரு தொடங்கினார். நாட்டு மக்களுக்கு சுதந்திர தீயை மூட்டவும், நாடு சுதந்திரம் பெறவும் நஷனல் ஹெரால்டு பத்திரிகை முக்கிய பங்காற்றியது. இந்த பத்திரிகையை முடக்க ஆங்கிலேயர்கள் கூட இதுபோன்ற நடவடிக்கைகளை எடுத்தது இல்லை. ஆனால் இப்போது ஆட்சியில் இருப்போர் இந்த பத்திரிகை மீது தேவையற்ற நடவடிக்கை எடுத்துள்ளனர். இதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

பாரம்பரியமான நஷனல் ஹெரால்டு பத்திரிகையை முடக்க நடக்கும் முயற்சியை தடுத்து நிறுத்த வேண்டும். காங்கிரஸாரின் ஒட்டுமொத்த எதிர்ப்பையும் காட்ட வேண்டும். அதோடு நாடாளுமன்றத்திலும் பதிலடி கொடுக்க வேண்டும். அதற்கு காங்கிரஸ் எம்.பிக்கள் அனைவரும் தயாராக வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

யங் இந்தியன் அலுவலகத்திற்கு சீல் வைக்கப்பட்ட சம்பவத்திற்கும், காங்கிரஸ் அலுவலகம் மற்றும் சோனியா வீட்டிற்கு செல்லும் சாலைகளில் தடுப்புகள் அமைத்து பொலிஸார் குவிக்கப்பட்ட சம்பவத்திற்கும் கண்டனம் தெரிவித்து காங்கிரஸார் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று நடந்த நாடாளுமன்ற கூட்டத்திலும் காங்கிரஸ் எம்.பிக்கள் அமளியில் ஈடுபட்டனர். இதற்கிடையே நஷனல் ஹெரால்டு பத்திரிகையை நடத்தி வரும் யங் இந்தியன் அலுவலக பொறுப்பாளர்களில் ஒருவரான காங்கிரஸ் கட்சியின் மேல் சபை தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவை விசாரணைக்கு வருமாறு அமுலாக்க துறை ஏற்கனவே சம்மன் அனுப்பி இருந்தது. ஆனால் அப்போது அவர் விசாரணைக்கு ஆஜராகவில்லை. இதையடுத்து அவருக்கு மீண்டும் அமுலாக்க துறை சம்மன் அனுப்பி உள்ளது என தகவல் வெளியாகியுள்ளது.



## சிலுவை ஸ்டிக்கர் ஒட்டி வந்த கார்; திருப்பதி கோவிலில் பரபரப்பு

திருப்பதியில் ஏழுமலையானை தரிசிப்பதற்காக நாடு முழுவதிலும் இருந்து தினமும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பஸ், கார், வான் மூலம் வருகின்றனர். தரிசனத்திற்கு வரும் வாகனங்களில் மாற்று மதத்தினர் சின்னம் பொருத்திய வாகனங்கள் திருமலைக்கு செல்ல அனுமதி இல்லை. இதற்காக அலிபிரி சோதனை சாவடியில் வாகனங்கள் முழுமையாக பரிசோதனை செய்த பிறகு திருமலைக்கு அனுமதிக்கப்படுகிறது. இந்த நிலையில் நேற்று தமிழக பதிவு எண் கொண்ட கார் ஒன்று சிலுவை ஸ்டிக்கர் ஒட்டி அலிபிரி சோதனை சாவடிக்கு வந்தது.

அங்கிருந்த திருப்பதி தேவஸ்தான விஜிலென்ஸ் அதிகாரிகள் காரை முழுமையாக சோதனை செய்யாமல் திருமலைக்கு அனுமதித்தனர். அந்த கார் திருமலையில் உள்ள எஸ்.எம்.சி. பகுதியில் நிறுத்தப்பட்டிருந்தது. இதனைக்கண்ட தேவஸ்தான அதிகாரிகள் கார் உரிமையாளரை அழைத்து காரில் ஒட்டப்பட்டு இருந்த சிலுவை ஸ்டிக்கரை அகற்றினர். மேலும் மாற்று மதத்தினரின் சின்னங்களை ஒட்டிய வாகனங்களுக்கு திருமலையில் அனுமதி இல்லை. இனிமேல் இதுபோன்று வரக்கூடாது என எச்சரிக்கை செய்து அனுப்பி வைத்தனர். மேலும் அலிபிரி சோதனை சாவடியில் பணியில் இருந்த ஊழியர்களிடம் விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது. சிலுவை ஸ்டிக்கர் ஒட்டி திருமலைக்கு வந்த காரால் சிறிது நேரம் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

## சிவசேனா கட்சியை ஒழிக்க முயற்சி உத்தவ் தாக்கரே குற்றச்சாட்டு



மறைந்த தலைவர் பால் தாக்கரேவால் 1966ம் ஆண்டு நிறுவப்பட்ட சிவசேனா கட்சி பல்வேறு சரிவுகளை சந்தித்துள்ளது. சக்திவாய்ந்த தலைவர்கள் பலரும் கட்சியில் இருந்து விலகி உள்ளனர். ஆனால் சமீபத்தில் ஏக்நாத் ஷிண்டே தலைமையில் 40 எம்.எல்.ஏக்கள் கொண்ட அதிருப்தி அணி பிரிவு சிவசேனாவுக்கு கடும் பின்னடைவாக அமைந்துள்ளது. மராட்டியத்தில் ஆட்சியில் இருந்து சிவசேனா தலைமையிலான மகா விகாஸ் அகாடி கூட்டணி ஆட்சி அதிருப்தி எம்.எல்.ஏக்களின் எதிர்ப்பு காரணமாக கவிழ்ந்தது. இந்த அதிருப்தி அணி பா.ஜனதாவுடன் இணைந்து ஆட்சியை கைப்பற்றி உள்ளது. மேலும் உண்மையான சிவசேனா நாங்கள் தான் என கூறிவரும் அதிருப்தி அணியினர் இதற்காக நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தனர்.

இது தொடர்பான வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் விசாரணையில் உள்ளது. மேலும் வரும் காலத்தில் பா.ஜனதா போன்ற சித்தாந்தம் உள்ள கட்சிகள் மட்டுமே பிழைக்கும், குடும்ப அரசியல் செய்யும் மற்ற கட்சிகள் அழிந்து விடும் என்று பா.ஜனதா கட்சியின் தலைவர் ஜே.பி.நட்டா கூறியிருந்தார்.

இதை மேற்கோள் காட்டும் வகையில் நேற்று 'மாதோஸ்ரீ' இல்லத்தில் கட்சி தொண்டர்கள் மத்தியில் பேசிய சிவசேனா தலைவர் உத்தவ் தாக்கரே கூறியதாவது:- சிவசேனாவை பிளவுபடுத்த பல முறை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. ஆனால் இப்போது கட்சியை முழுவதும் ஒழித்துக் கட்ட புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிவசேனா எம்.பி. சஞ்சய் ராவத்தின் வீட்டில் அமுலாக்கத்துறை இயக்குநரகம் நடத்திய சோதனை கட்சியை அழிக்கும் அவர்களின் சதித் திட்டத்தின் ஒரு அங்கமாகும். சிவசேனா தொடர்பான வழக்கில் எனக்கு நீதித்துறை மீது முழு நம்பிக்கை உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.



## ஒரே மாதத்தில் 751 அரசாணைகள்; ஷிண்டே அரசு நடவடிக்கை

மகாராஷ்டிரா முதல் மந்திரியாக ஏக்நாத் ஷிண்டே கடந்த மாதம் 30ம் திகதி பதவியேற்றுக் கொண்டார். அந்த நாளில் இருந்து சுமார் 751 அரசாணைகளை அரசு வெளியிட்டுள்ளது. அரசாணை என்பது வளர்ச்சி தொடர்பான பணிகளுக்கு நிதி ஒதுக்குவதற்கான ஒப்புதல் ஆகும். ஷிண்டே அரசு இதுவரை மந்திரி சபையை விரிவாக்கம் செய்யவில்லை. முதல் மந்திரியாக ஏக்நாத் ஷிண்டேவும், துணை முதல் மந்திரியாக தேவேந்திர பட்னாவிசும் உள்ளனர்.

துணை முதல் மந்திரி தேவேந்திர பட்னாவிஸ் இலாகா இல்லாத மந்திரியாக இருப்பதால் முடிவெடுக்க முதல் மந்திரிக்கு மட்டுமே உரிமை உள்ளது. இந்த அரசாணைகளில் மெட்ரோ-3 வழித்தடத்திற்காக கூடுதல் கடன் வழங்கப்பட்டது. மறைந்த தலைவர் பாலாசாகேப் தேசாய் சிலை நிறுவ ரூ.52 லட்சம் நிதி ஒதுக்கீடு உள்ளிட்டவை அடங்கும். பாலாசாகேப் தேசாயின் பேரன் ஷம்புராஜ் தேசாய் தற்போது ஷிண்டே முகாமில் உள்ளார். பொது சுகாதாரத்துறைக்கு அதிகபட்சமாக 104 அரசாணைகளும், மருத்துவ கல்வி துறையில் 24 அரசாணைகளும் வழங்கப்பட்டு உள்ளன. இந்த ஆண்டு ஜூன் மாதம், ஆளும் சிவசேனா கட்சியில் பிளவு வெடித்தது. இந்த சம்பவத்தில் உத்தவ் தாக்கரே தலைமையிலான மகா விகாஸ் அகாடி அரசு 4 நாட்களில் 182 அரசாணைகளை வெளியிட்டது. பிரவீன் தரேகர் இவ்வளவு உத்தரவுகளை குறுகிய காலத்தில் பிறப்பிப்பது நெறிமுறையற்றது என விமர்சித்துள்ளார்.





# சித்தானைக்குட்டி சுவாமிகளின் குருபூஜை நாளை காரைதீவில்!

(வி.ரி.சகாதேவராஜா)

சித்தருள்சித்தர் ஸ்ரீ சித்தானைக்குட்டி சுவாமியின் 71 ஆவது குருபூஜையும், அன்ன தானமும் காரைதீவு ஸ்ரீ சித்தானைக்குட்டி ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெற உள்ளன.

ஆலய பரிபாலன சபை தலைவர் பொன். பாலேந்திரா(ஆசிரியர்) தலைமையில் நடை பெறவிருக்கின்ற அப்பாரம்பரிய நிகழ்விற்கு முன்னோடியாக கடந்த ஞாயிற்றுக்கிழமை குரு பூஜை தொடர்பான சித்தர் பட்டய அறிவிப்பு இடம்பெற்றது . நேற்று புதன்கிழமை சுவாமிகள் முத்து சப்புறத்தில் வீதி வலம் வந்தார்.

இன்று வியாழக்கிழமை சித்தர் ஆலயத்தில் கோமாதா பூஜை, 210 சித்தர்களுக்கான வேள்வி, அன்னதானம் மற்றும் திருவிளக்கு பூஜை என் பன நடைபெற ஏற்பாடாகியிருக்கிறது.

நாளை வெள்ளிக்கிழமை ஆயிரக்கணக்கான அடியார்கள் மத்தியில் 71 வது குருபூஜையும் அன்னதானமும் நடந்தேற இருக்கின்றது.

# மூன்றரை வயதுச் சிறுமி சுவர் விழுந்ததில் மரணம்

(கல்லடி நிருபர்)

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புணாணை பொத்தனை பகுதியில் நேற்று வீட்டின் சுவர் விழுந்ததில் சிறுமியொருவர் உயிரிழந்துள்ளார் என வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லசந்த பண்டார தெரிவித்தார்.

கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மீள்குடியேற்றக் கிராமமான புணாணை பொத்தனையைச் சேர்ந்த உசனார் பாத்திமா றீமா என்ற மூன்றரை வயதுடைய சிறுமியே வீட்டின் சுவர் விழுந்ததில் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுமியின் வீட்டிற்கு அருகில் வீடு உடைக்கப்பட்டு ஒரு பக்கம் சுவர் மாத்திரம் காணப்பட்ட நிலையில் சீமெந்து கல் சுவர் ஓரத்தில் இருந்து மூன்று சிறுமிகள் விளையாடிக் கொண்டிருந்த போது, பலமாக வீசி வரும் காற்றில் சுவர் திடீரென சரிந்து விழுந்ததாகக் கூறப்படுகிறது. அதில் இந்தச் சிறுமி உயிழந்தார். மற்றைய இருவரும் தெய்வாதீனமான உயிர் தப்பியுள்ளனர்.

சிறுமியின் சடலம் நேற்று வாழைச்சேனை ஆதார வைத்தி யசாலையில் வைத்திய பரிசோதனைக்காக வைக்கப்பட்டி ருந்தது. வாழைச்சேனை பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

# தூண்டிலில் சிக்கிய பாரிய கொடுவா மீன்

(பாறுக் ஷிஹான்)



பொழுதுபோக்கிற் க ாக தூண்டில் வீசிய வரின் சிறிய இயந்திர தூண்டிலில் சுமார் 25 கிலோ எடையுள்ள பாரிய கொடுவா மீன் சிக்கியுள்ளது.

நேற்று அம்பாறை மாவட்டம் காரைதீவு ம ற்றும் நிந்தவூர் பகுதி களை இணைக்கும் முகத்துவாரத்துக் கடற் கரையில் இரு இளை ஞர்கள் கடலில் தூண் டில்மூலம் இந்தமீனைப் பிடித்துள்ளனர்.

சுமார் 18 ஆயிரம் ரூபா பெறுமதியுடைய இந்த மீன் தூண்டிலில் சிக்குண்டு கடலில் அட்டகாசம் காட்டியது டன் இளைஞர்கள் அதனைக் கடலில் இருந்து கரைக்கு இழுத்து வருவதற்கு பெரும் சிரமப்பட்டனர்.

அம்பாறை மாவட்டக் கடற்கரையில் பருவ மாற்றம் காரணமாக அதிகளவில் மழை பெய்து வருவதுடன் சில முகத்துவாரங்களும் வெட்டப்பட்டுள்ளன. இதனைத் தொடர்ந்து பொழுதுபோக்கிற்காக சிலர் தூண்டில் மூலம் அப்பகுதியில் மீன்களை பிடித்து வருவதைக் காண முடிகின்றது.

# நூறு நாள்கள் செயல்முனைவு நேற்று திருகோணமலையில்!





(ஹஸ்பர்)

வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமை களுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும் எனும் நூறு நாள்கள் செயல்முனைவின் மூன்றாம் நாள் கவனவீர்ப்பு நேற்றுப் புதன்கிழமை திருகோணமலை மாவட்டத்தில் ஆனந்தபுரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இப்போராட்டத்தில் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள், சிவில் அமைப்பினர், பெண்கள் அமைப்பினர், செயற்பாட்டாளர் என 150 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களுக்கான கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும் என்ற கோரிக்கையுடன் நடைபவனியாக வருகைதந்து மைதானத்தில் கூடியிருந்து தங்கள் கோரிக்கைகளை முன்வைத்தனர்.

அடுத்தகட்ட போராட்டம் முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைத்துறைப்பற்றில் இன்று வியாழக்கிழமை காலை 10மணிக்கு நடைபெறுகின்றது.

கடந்த முதலாம் திகதி தொடக்கம் நூறு நாள்களுக்கு தினசரி வடக்கு, கிழக்கில் ஒவ்வொரு இடங்களிலும் இந் தப் போராட்டம் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

# ஜனநாயக உறுதிப்பாட்டுக்குத் தேவைப்படுவது சட்டத்தின் ஆட்சியேயன்றி அடக்குமுறைகளல்ல

## மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களும் சிவில் சமூக அமைப்புக்களும் கூட்டாக வலியுறுத்தல்

ஜனாதிபதியின் அவசரகால நிலைப் பிரகடனத்துக்கு நாடாளுமன்றம் அங்கீகாரம் அளித்துள்ளமை நிறைவேற்றதிகாரமும் சட்டவாக்கமும் தற்போது அடக்குமுறைப்பாதையில் செல்வதையே காண்பிக்கின்றது.

நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கு அமைதிவழியிலான கருத்து வெளிப்பாடு அவசியம் என்பதுடன் அரசியல் ஸ்திரத்தன்மையை வலுப்படுத்துவதற்குத் தேவைப்படுவது சட்டத்தின் ஆட்சியும் சுமுகமான கலந்துரையாடல்களுமேயன்றி அடக்குமுறையல்ல என்று சுட்டிக்காட்டியிருக்கும் சிவில் சமூகப்பிரதிநிதிகள், ஆகவே போராட்டக்காரர்களுக்கு எதிரான அடக்குமுறைகளை ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் உடனடியாக முடிவிற்குக்கொண்டு வர வேண்டும் என்றும் கூட்டாக வலியுறுத்தியுள்ளனர்.

அமைதிப்போராட்டக்காரர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட வன்முறைத் தாக்குதல்கள் தொடர்பில் அம்பிகா சற்குணநாதன், அமாலினி டி சேரா, பவானி பொன்சேகா, தில்ருக்ஷி ஹந்துனெத்தி, கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து, பிரிட்டோ பெர்னாண்டோ, கலாநிதி ஜெஹான் பெரேரா உள்ளிட்ட 222 மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், காணாமல்போனோர் குடும்ப ஒன்றியம், தேசிய சமாதானப்பேரவை, சமூக நீதிக்கான பெண்கள் இயக்கம் உள்ளிட்ட 70 சிவில் சமூக அமைப்புக்களும் இணைந்து வெளியிட்டுள்ள கூட்டறிக்கையிலேயே மேற்கண்டவாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பவை வருமாறு –

ஆயுதமேந்தாது அமைதியான முறையில் போராட்டங்களை மேற்கொண்ட ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக இலங்கை அரசாங்கத்தால் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள வன்முறைகள் மற்றும் பழிவாங்கல்கள் உள்ளிட்ட அனைத்து வழிமுறைகளிலுமான தாக்குதல்களை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

போராட்டக்காரர்களைக் கடத்துதல், கைதுசெய்தல், அச்சுறுத்துதல் மற்றும் அடக்கியொடுக்குதல் உள்ளடங்கலாக மனதுக்கு சஞ்சலமேற்படுத்தும் வகையில் கடந்த சில நாள்களாகத் தீவிரமடைந்துவரும் போக்கு தொடர்பில் நாம் அதீத கரிசனை கொண்டுள்ளோம்.

கடந்த ஜுலை மாதம் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களுடன் சம்பந்தப்பட்ட அருட்தந்தை ஜீவந்த பீரிஸ் மற்றும் ஏனைய முன்னணி மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் பலருக்கு கொழும்பு நீதி வான் நீதிமன்றம் பயணத்தடை விதித்திருப்பதாக ஊடக செய்திகள் மூலம் அறியமுடிவதுடன், கடந்த மாதம் 27 ஆம்திகதிதேவாலயம்ஒன்றுக்குச்சென்ற அப்பகுதி பொலிஸார் அங்கிருந்த வதிவிட குருவானவரிடம் அருட்தந்தை ஜீவந்தவைக் கைதுசெய்வதற்குத் தமக்குக்கொழும்பிலிருந்து உத்தரவு கிடைத்திருப்பதாகத் தெரிவித்துள்ளனர். அது மாத்திரமன்றி முன்னரங்கப் போராட்டக்காரர்கள் மற்றும் போராட்டத்தை அறிக்கையிட்ட ஊடகவியலாளர்களை இலக்குவைத்தும்பல்வேறுவடிவங்களில் அடக்குமுறைகள் கட்ட விழ்த்துவிடப்பட்ட சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

அரசாங்கத்தின் தவறான முகாமைத்துவமும் ஊழல் மோசடிகளுமே எரிபொருள், உணவு, மருந்து போன்ற அத்தியாவசியப் பொருள்களின் பற்றாக்குறை உள்ளடங்கலாக நாடு பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டமைக்குப் பிரதான காரணம் என்பதை பொதுமக்கள் பலரும் புரிந்துகொண்டதன் விளைவாகவே கடந்த மார்ச் மாதத்திலிருந்து ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பெருமளவிற்கு அமைதியான முறையில் முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டங்கள் கடந்தகாலத் தவறுகளுக்கானபொறுப்புக்கூறலையும் ஆட்சிமுறைமையில் மாற்றத்தையுமே கோரின.

இருப்பினும் அதற்கு அரசாங்கம் காண்பித்துவரும் துலங்கலில் நியாயமற்ற முறையிலான அதிகாரப் பிரயோகமும் அச்சுறுத்தல்களும் உள்ளடங்கியிருப்பதுடன் ஆர்ப்பாட்டக்காரர்கள், ஆர்ப்பாட்டங்களுக்குத் தலைமைதாங்கியவர்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களை ஒழுங்குசெய்தோர் என நம்பப்படுபவர்களுக்கு எதிரான சட்டரீதியான பழிவாங்கல்களும் இடம்பெற்றுவருகின்றன.

பாதிக்கப்பட்ட தரப்பினர் பொறுப்புக்கூறலை வலியுறுத்துவதும், அதற்குப் பதிலாக அரசாங்கம் அடக்குமுறையைப் பிரயோகிப்பதும் இலங்கைக்குப் புதிதல்ல. ஏற்கனவே இதனைப்போன்று நீதியையும் தீர்வையும் கோரிய வடக்கு, கிழக்கு மக்கள் வன்முறைகளுக்கும் அடக்குமுறைகளுக்கும் உள் ளாக்கப்பட்டு வந்திருக்கின்றனர்.

மக்களின் தன்னெழுச்சிப் போராட்டங்களைத் தொடர்ந்து நாட்டிலிருந்து வெளியேறிய கோட்டாபய ராஜபக்ஷ, அவரது ஜனாதிபதிப் பதவியை இராஜினாமா செய்ததன் விளைவாக ஜனாதிபதியாகப் பதவியேற்றுக்கொண்ட ரணில் விக்கிரமசிங்க அதற்கு முன்னர் ஆர்ப்பாட்டக்காரர்களைப் புகழ்ந்ததுடன், அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்படும் என்று பிரதமராகப் பதவி வகித்தபோது உத்தரவாதமும் அளித்தார். இருப்பினும் ஜனாதிபதியாகப் பதவியேற்றுக் கொண்டதன் பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் தொடர்பில் தவறான பிரசாரங்களைச் செய்தமையுடன் வன்முறைகளையும் பிரயோகித்தார்.

அடுத்ததாக அவசரகாலநிலையைப் பிரகடனப்படுத்தியமை இதனுடன் தொடர்புபட்ட சர்வதேச நியமங்களுக்கு ஏற்புடையதாக அமையவில்லை. அத்தோடு நீதித்துறையால் கையாளப்படவேண்டிய அல்லது நீதித்துறையின் மேற்பார்வைக்கு உட்படுத்தப்படவேண்டிய பல அதிகாரங்கள் எவ்வித சுயாதீன மேற்பார்வையுமின்றி இராணுவத்துக்கு வழங்கப்பட்டிருப்பது அரசமைப்பில் உள்ளடங்கியுள்ள பல அடிப்படை உரிமைகள் மீறப்படும் வகையில் அதிகாரங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பன தன்னிச்சையாகப் பயன்படுத்தப்படுவதற்கும் அதிகாரத் துஷ்பிரயோகம் இடம்பெறுவதற்குமே வழிவகுக்கும். அதுமாத்திரமன்றி ஜனாதிபதியின் அவசரகால நிலைப்பிரகடனத்திற்கு நாடாளுமன்றம் அங்கீகாரம் அளித்துள்ளமை நிறைவேற்றதிகாரமும் சட்டவாக்கமும் தற்போது அடக்குமுறைப் பாதையில் செல்வதையே காண்பிக்கின்றது.

நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கு அமைதிவழியிலான கருத்து வெளிப்பாடு அவசியம் என்பதுடன், தற்போதைய நெருக்கடி நிலையில்சர்வதேசத்தின்நம்பிக்கையை வென்றெடுப்பதற்கும் இது இன்றியமையாததாகும்.

மேலும் அரசியல் ஸ்திரத்தன்மையை வலுப்படுத்துவதற்குத் தேவைப்படுவது சட்டத்தின் ஆட்சியும் சுமுகமான கலந்துரையாடலுமேயன்றி அடக்குமுறையல்ல. ஆகவே, போராட்டக்காரர்களுக்கு எதிரான அடக்குமுறைகளை ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் உடனடியாக முடிவிற்குக்கொண்டு வருவதுடன், ஏற்கனவே வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட்டவர்கள் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

அமைதி வழியிலான ஆர்ப்பாட்டங்களும் மனித உரிமைகளைப் பாதுகாத்தலும் குற்றச்செயல்கள் அல்ல என்பதை அரசாங்கம் நினைவில் கொள்ளவேண்டும் என்று அந்த அறிக்கையில்வலியுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை சுற்றுலாத் துறை தூதராக சனத் ஜெயசூரிய!

## அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ அறிவிப்பு



இலங்கையின் சுற்றுலாத் துறை தூதுவராக இலங்கை கிரிக்கெட் அணியின் ஜாம்பவான் சனத் ஜெயசூரியவை நியமிக்க சுற்றுலா அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தீர்மானித்துள்ளார்.

புதிய சுற்றுலா ஆலோசனைக் குழுவுடன் இணைந்து நியமனத்தை அறிவிக்கும் சிறப்பு நிகழ்வு இன்று (வியாழக்கிழமை) நடைபெறுகிறது. சனத் ஜெயசூரிய உலகம் முழுவதும் மிகவும் பிரபலமாக உள்ளார்,

மேலும் அவர் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் மாலைதீவுகளை குறிவைத்து இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு நிகழ்வுகளில் தானாக முன்வந்து பங்கேற்க ஒப்புக்கொண்டார் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# தியவதன நிலமேயின் ஏற்பாட்டில் கள்ள வியாழையில் அன்னதானம்





(காரைதீவு நிருபர் சகா)

கதிர்காம காட்டுப்பாதையின் மத்தியில் இருக்கின்ற கள்ள வியாழை எனுமிடத்தில் பெரிய ஏற்பாட்டில் அன்னதானம் இடம்பெற்று வருகிறது.கண்டி தலதாமாளிகை நிலமே பிரதீப் நிலங்க தயாளவின் ஏற்பாட்டில் இந்த அன்னதானம் 12 ஆவது வருடமாக நடைபெற்று வருகிறது. நீண்டதூரம் நடந்து களைத்து வருகின்ற அடியார்களுக்கு இது ஒரு பெரும் வரப் பிரசாதமாக அமைகின்றது. ஒரே நேரத்தில் ஆயிரம் அடியார்கள் இருந்து உண்ணும் வகையில் பாரிய கொட்டகை அமைக்கப்பட்டுள்ளது.தினமும் ஆயிரக்கணக்கான அடியார்கள் சென்று பசி ஆறி வருகின்றார்கள்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.08.2022இல் வெளியிடப்பெற்றது.